### துணை வேந்தர்களைத் தேர்ந்தெடுக்க ‘தேடுதல் குழுக்கள்’ விவகாரம்:

# மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை செயல்படவிடாமல் பல்வேறு இடையூறுகளை செய்து வருகிறார் தமிழ்நாடு ஆளுநர்!

## உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் அறிக்கை!



**சென்னை, டிச.20-**

**துணைவேந்தர்களை தேர்ந்தெடுக்க தேடுதல் குழுக்கள் அமைப்பது தொடர்பாக உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் வெளியிட்டுள்ள அறிக்கையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை செயல்பட விடாமல் பல்வேறு இடையூறுகளை செய்து வருகிறார் தமிழ்நாடு ஆளுநர் என்று குறிப்பிட்டுள்ளார்.**

**தொடர்ந்து மாநில அரசு பல்கலைக்கழகங்களில் காலியாக உள்ள துணை வேந்தர் பணியிடங்களை நிரப்ப தகுதியுள்ள நபரை தேர்ந்தெடுக்க தேடுதல் குழுக்கள் அமைக்கப்பட்டிருப்பது மாநில அரசு பல்கலைக்கழக சட்ட பிரிவுகளுக்கு உட்பட்டு எடுக்கப்பட்ட முடிவாகும் என்றும் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.**

இது தொடர்பாக அவரது அறிக்கை வருமாறு:-

மாநில அரசு பல்கலைக்கழகங்களின் சட்டப் பிரிவுகளின்படி அமைக்கப்பட்ட தேடுதல் குழுவி னால் பரிந்துரைக்கப்படும் மூன்று நபர்களில் ஒருவர் சார்ந்த பல்கலைக்கழகங்களின் துணைவேந்தராக ஆளுநர் - வேந்தர் அவர்களால் நியமனம் செய்யப்படுவார். இதுவரை இந்த நடைமுறையையே பின்பற்றப்பட்டு வருகிறது.

அதன்படியே, தமிழ்நாடு அரசால் பாரதியார் மற்றும் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகங்களுக்கு புதிய துணைவேந்தர்களை தேர்வு செய்வதற்கு, ஆளுநர் அலுவலக கடிதத்தில், சார்ந்த பல்கலைக்கழகங்களின் சட்டவிதிகளின் படி மூன்று பேர் அடங்கிய தேடுதல் குழு அமைத்து அரசிதழில் வெளியிட தெரிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் அரசால் மூன்று பேர் அடங்கிய தேடுதல் குழு அரசிதழில் அறிவிக்கையாக வெளியிடப்பட்டது.

ஆனால், ஆளுநர் அவர்கள் தன்னிச்சையாக, பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் 2018-ஆம் ஆண்டைய நெறிமுறைகளின்படி, மேற்கண்ட பல்கலைக்கழகங்களின் தேடுதல் குழுக்களில் நான்காவது நபராக பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் தலைவரால் பரிந்துரைக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரை நியமனம் செய்து பாரதியார், தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் மற்றும் சென்னை பல்கலைக்கழகங்களுக்கு நான்கு பேர் அடங்கிய தேடுதல் குழு அமைத்து 06.09.2023 நாளிட்ட அறிவிக்கைகளை வெளியிட்டார்.

ஆனால், தமிழ்நாடு அரசு சென்னை பல்கலைக்கழக துணைவேந்தரைத் தேர்வு செய்வதற்கு அப்பல்கலைக்கழக சட்டவிதிகளின்படி மூன்று பேர் மட்டுமே அடங்கிய தேடுதல் குழு அமைத்து அரசாணை வெளியிட்டு அறிவிக்கை அரசிதழில் வெளியிடப்பட்டது.

ஆனால், ஆளுநர் அவர்கள் இத்தேடுதல் குழுவினை ஏற்காமல், பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் 2018-ஆம் ஆண்டைய நெறிமுறைகளின்படி, மேற்கண்ட பல்கலைக்கழகங்களின் தேடுதல் குழுக்களில் நான்காவது நபராக பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் தலைவரால் பரிந்துரைக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரை நியமனம் செய்ய முதலமைச்சர் அவர்களுக்கு முகவரியிட்ட கடிதம் வாயிலாக வலியுறுத்தினார்.

பல்கலைக்கழக துணைவேந்தரை தேர்வு செய்வதற்காக அமைக்கப்படும் தேடுதல் குழுவை அறிவிக்கையாக வெளியிடுமாறு ஆளுநர் அவர்கள் அரசிற்கு பரிந்துரை மட்டுமே செய்ய முடியுமே தவிர, ஆளுநர் அவர்கள் தன்னிச்சையாக தேடுதல் குழுவினை அமைத்து அறிவிக்கை வெளியிடுவதற்கு அவருக்கு அதிகாரம் இல்லை.

அதனால் மேற்கண்ட ஆளுநர் அவர்களின் கடிதம் குறித்து அரசு தீவிரமாக ஆய்வு செய்து, மேற்குறிப்பிட்ட பல்கலைக்கழகங்களுக்கு அமைக்கப்பட்ட தேடுதல் குழுக்கள் அரசாணையின்படியும். அந்தந்த பல்கலைக்கழக சட்டப்படியும் தான் உள்ளதும். நான்காவது நபராக பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுத் தலைவர் அவர்களால் பரிந்துரைக்கப்பட்ட உறுப்பினரைச் சேர்த்து மேற்கண்ட பல்கலைக்கழகங்களுக்கு அமைக்கப்பட்ட தேடுதல் குழுவை மாற்றியமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஆளுநர் அவர்களுக்கு 13.09.2023 ஆம் நாளிட்ட கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது.

மேலும், இது தவிர, ஆளுநர் அவர்களின் மேற்கண்ட அறிவிக்கைகளை எதிர்த்து, அரசு உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. (W.P. (C) 1271 of 2023). இவ்வழக்கு தற்போது உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

ஆளுநர் அவர்களின் அலுவலகத்தின் மூலம் 09.01.2024 அன்று வெளியிடப்பட்ட பத்திரிக்கை செய்தி மூலம் பாரதியார், தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் மற்றும் சென்னை பல்கலைக்கழகங்களுக்கு புதிய துணைவேந்தர் தேர்வு செய்வதற்காக பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு தலைவரால் பரிந்துரைக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் அடங்கிய நான்கு பேர் கொண்ட தேடுதல் குழுவினை அமைத்து வெளியிட்ட தனது 06.09.2023 ஆம் நாளிட்ட அறிவிக்கைகளை திரும்பப் பெற்றுக்கொண்டார்.

தமிழ்நாடு அரசு உயர் கல்வித்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் 13 பல்கலைக்கழகங்கள் இயங்கி வருகின்றன. இவற்றுள் நாளது தேதியில் கீழ்குறிப்பிட்ட ஆறு பல்கலைக்கழகங்களில் துணை வேந்தர் பணியிடம் காலியாக உள்ளது.

1. பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்
2. தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம், சென்னை
3. சென்னை பல்கலைக்கழகம், சென்னை
4. அண்ணா பல்கலைக்கழகம், சென்னை
5. அண்ணாமலை பல்கலைக்கழகம், சிதம்பரம்.
6. மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

மேலும், திருச்சி, பாரதிதாசன் மற்றும் சேலம், பெரியார் பல்கலைக்கழகங்களின் தற்போதைய துணை வேந்தர்களின் பதவிக்காலம் முடிவுற்ற நிலையில் அவர்களது பணிக்காலம் ஆளுநரால் மேலும் ஓராண்டிற்கு நீட்டிக்கப்பட்டு அவை முறையே பிப்ரவரி 2025 மற்றும் மே 2025ல் முடிவுறவுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களின் சட்ட விதிகளின்படி துணை வேந்தர் அவர்களை தேர்வு செய்வதற்கு அமைக்கப்படும் தேடுதல் குழுவில் ஆளுநர் அவர்களால் பரிந்துரைக்கப்படும் உறுப்பினர், அரசால் பரிந்துரைக்கப்படும் உறுப்பினர் மற்றும் சார்ந்த பல்கலைக்கழக ஆட்சிக்குழு/ஆட்சிப்பேரவையினால் பரிந்துரைக்கப்படும் உறுப்பினர் ஆகிய மூன்று நபர்களைக் கொண்ட தேடுதல் குழு அமைக்கப்படும்.

உச்சநீதிமன்றத்தால், ஜெகதீஷ் பிரசாத் சர்மா மற்றும் பலர் பீகார் மாநில அரசிற்கு எதிராக தொடர்ந்த வழக்கில், “கல்வி என்பது அரசியல் சாசனத்தின் பொதுப்பட்டியலில் (பிரிவு3) வருவதால், மாநில அரசானது கல்வியில் தனது சட்டங்களை சொந்தமாக வகுக்க சுதந்திரமும் அதிகாரமும் கொண்டுள்ளதால், பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் நெறிமுறைகளை முழுமையாக பின்பற்ற வேண்டிய கட்டாயமில்லை எனவும், பல்கலைக்கழக நிதிநல்கைக்குழு சட்டம் 1956ன் பிரிவு 26ல் குறிப்பிட்டுள்ளபடி, எந்தெந்த நெறிமுறைகளை ஏற்க விரும்புகிறதோ அவற்றை மட்டுமே பின்பற்றலாம் என தீர்ப்பு வழங்கியுள்ளது.”

எனவே, அரசாணை (நிலை) எண். 5, உயர்கல்வி (எச்1) துறை, நாள் 11.01.2021 மூலம், பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் நெறிமுறைகள் 2018இல் குறிப்பிடப்பட்டுள்ள நெறிமுறை 7.3 (ii)னை ஏற்காத காரணத்தாலும், உச்சநீதிமன்றத்தால், ஜெகதீஷ் பிரசாத் சர்மா மற்றும் சிலர் பீகார் மாநில அரசிற்கு எதிராக தொடர்ந்த வழக்கில் வெளியிடப்பட்ட தீர்ப்பின் அடிப்படையிலும், மாநில பல்கலைக்கழகங்களுக்கு சார்ந்த சட்டவிதிகளின்படி தேடுதல் குழுவினை அமைக்க தமிழ்நாடு அரசுக்கு உரிய சட்ட அதிகாரம் / உரிமை உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது, அண்ணாமலை பல்கலைக்கழகத்திற்கு அரசாணை (டி) எண் 270 உயர் கல்வி (எச்1) துறை நாள் 09.12.2024 மூலம் அடுத்த துணை வேந்தர் நியமனம் செய்வதற்கு மூன்று பேர் அடங்கிய தேடுதல் குழு (Search Committee) அமைத்து ஆணைகள் வெளியிடப்பட்டு அறிவிக்கை அரசிதழில் வெளியிடப்பட்டது.

மேலும், அண்ணா பல்கலைக்கழகத்திற்கும் அடுத்த துணைவேந்தர் நியமனம் செய்வது தொடர்பாக, அரசாணை (டி) எண் 277 உயர் கல்வி (ஐ1) துறை நாள் 13.12.2024 மூலம் சார்ந்த பல்கலைக்கழக சட்டவிதிகளின்படி மூன்று பேர் அடங்கிய தேடுதல் குழுவினை (Search Committee) அமைத்து ஆணைகள் வெளியிடப்பட்டு அறிவிக்கை அரசிதழில் வெளியிடப்பட்டது.

மேலும், திருச்சி, பாரதிதாசன் மற்றும் சேலம், பெரியார் பல்கலைக்கழக துணைவேந்தர்களின் பதவிக்காலம் முறையே வரும் பிப்ரவரி 2025 மற்றும் மே 2025ல் முடிவடைய உள்ளதால், இப்பல்கலைக்கழகங்களுக்கும் புதிய துணைவேந்தர் நியமனம் செய்வது தொடர்பாக, சார்ந்த பல்கலைக்கழகங்களின் சட்டவிதிகளின்படியும், உரிய சட்ட வல்லுநரின் ஆலோசனையை பெற்றும் முறையே அரசாணை (டி) எண் 271 உயர் கல்வி (எச்2) துறை நாள் 09.12.2024 மற்றும் அரசாணை (டி) எண் 276 உயர் கல்வி (கே1) துறை நாள் 13.12.2024ல் மூன்று பேர் அடங்கிய தேடுதல் குழு அமைத்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதில் எவ்வித விதி மீறல்களும் இல்லை.

தற்போது ஆளுநர்-வேந்தரின் அலுவலகத்தால் 18.12.2024 அன்று வெளியிடப்பட்ட பத்திரிகைச் செய்தியில் அண்ணாமலை பல்கலைக்கழகத்திற்கு அரசாணை (டி) எண் 270 உயர் கல்வி (எச்1) துறை நாள் 09.12.2024 மூலம் புதிய துணைவேந்தர் நியமனம் செய்வது தொடர்பாக அமைக்கப்பட்ட மூன்று பேர் அடங்கிய தேடுதல் குழு (Search Committee) பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவின் 2018 ஆம் ஆண்டைய நெறிமுறைகள் மற்றும் உச்சநீதிமன்ற தீர்ப்பினையும் மீறுவதாக உள்ளது என தெரிவித்து, மேற்படி அரசாணையை திரும்ப பெறவும், தேடுதல் குழுவில் நான்காவது நபராக பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் தலைவரால் பரிந்துரைக்கப்பட்ட உறுப்பினரை சேர்க்கும்படியும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் ஆசிரியர் மற்றும் இதர கல்வி பணியாளர்களை நியமனம் செய்வதற்கு குறைந்தபட்ச தகுதிகள் மற்றும் உயர்கல்வியில் தரத்தினை பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து நெறிமுறைகளை பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு நெறிமுறைகள், 2018 (UGC Regulations 2018) மூலம் வெளியிட்டது.

பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவால் வெளியிடப்படும் நெறிமுறைகளானது பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவால் மாநில அரசிற்கு பரிந்துரைப்பது வழிகாட்டுதல்களே (Only recommendations) தவிர, அவற்றை ஏற்பது என்பது மாநில அரசின் முடிவிற்கு உட்பட்டதாகும். மேற்காணும் நெறிமுறைகளை ஏற்பதற்காக, அந்த நெறிமுறைகளில் பல்கலைக்கழக துணைவேந்தரை தேர்வு செய்வதற்காக அமைக்கப்படும் தேடுதல் குழுவினை குறித்து குறிப்பிடப் பட்டுள்ள நெறிமுறை 7.3 (ii) -இல் சார்ந்த பல்கலைக்கழகங்களின் சட்டவிதிகளின்படியே தேர்வுக்குழு அமைக்கப்படும் என அரசாணை (நிலை) எண், 5, உயர்கல்வி (எச்1) துறை, நாள் 11.01.2021 மூலம் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

மேற்கண்ட நிலையில், மேற்குறிப்பிட்ட நான்கு பல்கலைக்கழகங்களுக்கு (அண்ணாமலை, அண்ணா, பாரதிதாசன் மற்றும் பெரியார் பல்கலைக்கழகங்கள்) அமைக்கப்பட்ட தேடுதல் குழுக்கள் சார்ந்த பல்கலைக்கழக சட்டங்களின் படியும் தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண், 5, உயர் கல்வி (எச்1) துறை, நாள் 11.01.2021ன் அடிப்படையிலும் தான் உள்ளது, இதில் விதிமீறல்கள் ஏதும் இல்லை. எனவே, பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு தலைவரால் பரிந்துரைக்கப்பட்ட உறுப்பினரைச் சேர்த்து, மேற்கண்ட பல்கலைக்கழகங்களுக்கு அமைக்கப்பட்ட தேடுதல் குழுவை மாற்றியமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை செயல்பட விடாமல் பல்வேறு இடையூறுகளை பலவகையிலும் ஆளுநர் செய்து வருகிறார். அதன் ஒரு பகுதி தான் துணை வேந்தர் தேடுதல் குழு அமைப்பு விவகாரத்தில் ஆளுநர் அனுப்பி உள்ள கடிதம்.

பல்வேறு மாநிலங்களைக் கொண்ட இந்தியாவில் அந்தந்த மாநில மக்களின் பண்பாட்டு கூறான கல்வி உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளை மாநில மக்களின் தேவைகளை உணர்ந்து அந்தந்த மாநில தேவைகளுக்கு தகுந்தார்போல் உயர் கல்வி அமைப்பினை அமைத்துக் கொள்ள மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுக்கு அதிகாரமும் உரிமையும் உள்ளது.

ஒவ்வொரு பல்கலைக்கழகமும் அதற்கென்று உருவாக்கப்பட்ட சட்டத்தின் படியே செயல்படுகிறது. பல்கலைக்கழகம் பொதுவான சில பரிந்துரைகளை அவ்வப்போது வழங்கும். தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசு தனது பல்கலைக்கழகத்திற்கு தான் இயற்றிய சட்டத்திற்கு உட்பட்டு செயல்படும். பல்கலைக்கழக மானியக் குழு, பல்கலைக்கழகம் அல்லது அரசிற்கு ஏதேனும் தெரிவிக்க வேண்டியது இருந்தால் அதை நேரடியாக தெரிவிக்கும்.

வேந்தர் என்ற பதவி வழி பொறுப்பை பயன்படுத்தி அரசு பல்கலைக்கழக சட்டப்படி எடுக்கப்படும் நடவடிக்கைகளை முடக்குவது எந்த வகையிலும் ஏற்புடையது அல்ல. ஆளுநர் அவர்கள் சட்டத்தை தவறாக தன் கையில் எடுத்துச் செயல்முறைகள் வெளியிடும் போக்கை அரசு கவனித்துக் கொண்டுதான் இருக்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை செயல்பட விடாமல் பல்வேறு இடையூறுகளை பல வகையிலும் ஆளுநர் செய்து வருகிறார்.

அதன் ஒரு பகுதிதான் துணை வேந்தர் தேடுதல் குழு அமைப்பு விவகாரத்தில் ஆளுநர் அனுப்பி உள்ள கடிதம். பல்கலைக்கழகங்கள் பல மாதங்களாக துணை வேந்தர் இல்லாமல் செயல்படுவதைப் பற்றி சிறிதும் கவலைப்படாமல் ஆளுநர் நடந்து கொள்ளவது மாணவர்கள் நலனுக்கு எதிரானது ஆகும்.

மாணவர்கள் நலன் கருதி மாநில ஆளுநர் பல்கலைக்கழகச் சட்டத்திற்கு உட்பட்டு அமைக்கப்பட்ட தேடுதல் குழுவிற்கு ஒப்புதல் அளித்திடுவதே அவர் வகிக்கும் பதவிக்கு அழகாகும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு சட்டமன்றம் மூலம் நிறைவேற்றப்படும் சட்டங்களுக்கு ஒப்புதல் வழங்குவது ஆளுநரின் கடமை.

ஆனால் அதனை செய்யாமல் அரசால் நிறைவேற்றப்படும் மக்கள் நலன் காக்கும் பலவற்றை நிராகரித்து வருகிறார். இதிலும் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் ஒரு பிரதிநிதியாக செயல்பட்டு அரசு பல்கலைக்கழக சட்டத்தினை புறம்தள்ளி பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவிற்கு ஏற்றார்போல் சாதமாக செயல்பட்டு வருகிறார். இனியாவது ஆளுநர் அவர்கள் தனது செயல்பாட்டினை மாற்றிக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.



அரியலூர் மாவட்டம் குன்னம் தொகுதி செந்துறை தெற்கு ஒன்றியம் சார்பில் மாவட்டக் கழகச் செயலாளர் தமிழ்நாடு அரசு போக்குவரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழிகாட்டுதலின்படி பிலாக்குறிச்சி கிராமத்தில் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க தெருமுனைப் பிரச்சார கூட்டம் ஒன்றிய செயலாளர் பூ.செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர், நாத்திகம் நாகராஜ், கழக இளம் பேச்சாளர் செசுலின் சந்தியா தீர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். உடன் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.



தமிழக முதல்வர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, தமிழக துணை முதல்வர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, அமைச்சர் எ.வ.வேலு ஆலோசனைகள்படி கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ அறிவுறுத்தலின்படி.. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை வடிவமைத்த சட்டமேதை புரட்சியாளர் அம்பேத்கரை அவமதித்த ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவைக் கண்டித்து கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டம், ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதி திருக்கோவிலூர் ஒருங்கிணைந்த ஒன்றியத்தின் சார்பில் நேற்று முன்தினம் (19.12.2024) வியாழக் கிழமை ஒன்றிய கழக செயலாளர்கள் ஆர்.ராஜேந்திரன்,எஸ்.அய்யனார் வி.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர்களின் தலைமையில் கண்டனம் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது,இதில் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள் மற்றும் கிளை கழக நிர்வாகிகள் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் உள்பட அனைவரும் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற தொகுதி, திருவெண்ணைநல்லூர் கிழக்கு ஒன்றியம், ஆமுர் கிராமத்தில் திராவிட மாடல் நல்லாட்சியில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பகுதிநேர நியாயவிலைக் கடையை வடக்கு மாவட்ட கழக அவைத் தலைவர்,தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழக ஆட்சி மன்ற குழு உறுப்பினர் ஆ.ஜெ.மணிக்கண்ணன் எம்.எல்.ஏ சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி,குத்துதிறந்து வைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசி,பருப்பு, சமையல் எண்ணெய், சக்கரை உள்ளிட்ட ரேஷன் பொருட்களை வழங்கினார்,இதில் சார் பதிவாளர் உமா, கூட்டுறவு துறை செயலாளர் அண்ணாதுரை, ஒன்றிய கழக செயலாளர்,மாவட்ட கவுன்சிலர் ம.சந்திரசேகரன் ஆகியோர் உடன் உள்ளனர்.

### செஞ்சி ஒன்றியத்தில் - மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட

# பொது மக்களுக்கு அரசு நிவாரண உதவிகள் வழங்கல்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ நேரில் சென்று ஆய்வு!

*செஞ்சி, டிச. 21 -*

*விழுப்புரம் மாவட்டத்தில் பெஞ்சால் புயல் மழையால் பெரும் சேதம் ஏற்பட்டது. இந்தப் புயல் சேதத்தால் பாதிப்படைந்த வீடுகள் மற்றும் நிலங்களுக்கு நிவாரணம் வழங்க தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின்அவர்கள் உத்தரவிட்டுள்ளார். அந்த வகையில் விழுப்புரம் மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிப்படைந்த குடும்பங்கள் கணக்கெடுப்பு செய்யப்பட்டு நிவாரணங்கள் வழங்கப்பட்டு வருகிறது.*

*இதையடுத்து செஞ்சி சட்டமன்ற தொகுதிகளில் தமிழக அரசின் 2000 ரூபாய்நிவாரணம் வழங்கும்பணி நடைபெற்று வருகிறது.*

*செஞ்சி ஒன்றியம் நரசிங்க ராயப்பேட்டை ஊராட்சி பூமியான் கொட்டை பகுதிநேர நியாய விலைக் கடை, கோனை ஊராட்சி கோனை புதூர் பகுதி நேர நியாய விலை கடை, மீனம்பூர் ஆகியநியாய விலை கடையில்அரசு சார்பில் வழங்கப்படும் நிவாரண உதவிகளை செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு புயல் மழையால் பாதிக்கப்பட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கு 2000 ரூபாய் நிவாரணத் தொகையை வழங்கினார்.*

*இதில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், கோனை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க செயலாளர் பழனிகுமார்,முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பாலகிருஷ்ணன்,ஒன்றிய பிரதிநிதி அய்யாதுரை,ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் நாகராஜன்,நிர்வாகிகள் சிவா, தாஜுதின் உள்ளிட்டோ கலந்து கொண்டனர்.*



கள்ளக்குறிச்சி மாவட்டம், வாணாபுரம் வட்டம், ரிஷிவந்தியம் ஊராட்சியில் அமைந்துள்ள ஸ்ரீ ராஜநாராயண பெருமாள் கோவில் திருப்பணி பாலாலயம் விழாவை தெற்கு மாவட்ட கழக செயலாளர்,தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு தொடங்கி வைத்தார், இதில் ஒன்றிய குழு பெருந்தலைவர் வடிவுக்கரசு சாமி சுப்பிரமணியன், மாவட்ட கழக பொருளாளர் கோவிந்தராஜ், ஒன்றிய கழக செயலாளர் பெருமாள், அறங்காவலர் குழு தலைவர் பாலாஜி பூபதி மற்றும் அறநிலையத் துறை அதிகாரிகள், துறை சார்ந்த அலுவலர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் திருக்கோவில் குருக்கள், பணியாளர்கள், கழக நிர்வாகிகள் உள்பட பலர் உடன் கலந்து கொண்டனர்.

# அண்ணா அறிவாலயம் ‘கலைஞர் கருவூல ஊழியர் டி.ஸ்டீபன் மூத்த மகன் மறைவு!

*சென்னை, டிச. 20-*

*அண்ணா அறிவாலயத்தில் உள்ள ‘கலைஞர் கருவூலத்தில்’ பணியாற்றி வரும் ஊழியரும் - சென்னை வடக்கு மாவட்டம், இராயபுரம் கிழக்கு பகுதி, 50வது வட்ட துணைச் செயலாளருமான டி.ஸ்டீபனின் மூத்த மகன் எஸ்.அருண் (வயது 35) சில நாட்களாக உடல் நலிவுற்றிருந்து, மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் (19.12.2024), மாலை 3.30 மணியளவில் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.*



*அன்னாரது உடல், சென்னை-13, இராயபுரம், காசித் தோட்டம் 3வது தெரு, கதவிலக்கம் 38-ல் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு, நேற்று (20.12.2024) காலை 10.00 மணியளவில் காசிமேடு இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டது.*




தஞ்சை தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் பட்டுக்கோட்டையில் சட்ட மாமேதை அம்பேத்கர் அவர்களை அவமதித்து பேசிய ஒன்றிய அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து மாவட்டக் கழகச் செயலாளர் கா. அண்ணாதுரை எம்.எல்.ஏ தலைமையில் மாபெரும் கண்ட ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் மாநில கழக நிர்வாகிகள் பழஞ்சூர் கே.செல்வம், வீ.ஜெயபிரகாஷ், மாவட்டக் கழக நிர்வாகிகள் ஆர்.பி.ரமேஷ், பொன்.சத்தியமூர்த்தி, மாநில பொதுக்குழு உறுப்பினர் மு.ரூஸ்வெல்ட் உள்ளிட்ட நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.